1990 மே 10]

9-45 மணி

திரு.எஸ்.ஏ. தங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய மின் உற்பத்தித் தேவையை யொட்டி மின்சார வினியோக நிலையங்களில் ஏற்படும்படியான இழப்பை 'லைன் லாசை' கண்டுபிடித்துத் தடுப்பதற்கு அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : என்னென்ன திட்டங்களுக்கு மத்திய அரசினுடைய உதவியை நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள் என்பதுதான் கேள்வி. அதற்கு விடையளித்திருக்கிறேன் பாதையிலே ஏற்படுகின்ற மின் இழப்பைப் பற்றி கேட்டிருக்கிறீர்கள். நாளைக்கும், நாளை மறு தினமும் அதுபற்றிப் பேசுவோம்.

திரு.எஸ்.ஏ. தங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது ஏராளமான அளவில் இந்த இழப்பு ஏற்படுவது என்பது யதார்த்தமான உண்மை. மின்சாரம் வழிகளில் திருடப்படுகின்றது. தவறான வழிகளில் உபயோகப்படுத்தப்படுகிறது. இவைகளைத் தடுத்தால் ஐந்தில் ஒரு பகுதி மின்சாரம் அரசுக்கு கிடைக்கும் என்று கூறுகிறார்களே, அதற்கு அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை இனியாவது மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு உறுப்பினருடைய அந்த யோசனையை அரசு பரிசீலிக்கும் நாளையும், நாளை மறுதினமும் நடக்கும் விவாதத்தில் அதுபற்றி நாம் பேசலாம்.

காடம்பாறை மின் உற்பத்தி திட்டம்.

* 4529 திரு.மு. இராமநாதன் :
மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) காடம்பாறை மின் உற்பத்தித் திட்டம் உற்பத்தியை தொடங்கிவிட்டதா?

(ஆ) இதன் மொத்த உற்பத்தித் திறன் எவ்வளவு?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 4x100 மெ.வா.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்தைய திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பிலே இருந்தபோது 73, 74—ஆம் ஆண்டுகளில், 16 ஆண்டுகளுக்கு முன்பு காடம்பாறை மின் உற்பத்தித் திட்டம் ஆசிய கண்டத்திலேயே விஞ்ஞான நுட்பம் வாய்ந்த ஒரு புதுமையான திட்டமாகவும், குறைந்த செலவில் அதிக மின் உற்பத்தி செய்யும் நூதனமான திட்டமாகவும் இது தொடங்கப் பட்ட திட்டம். ஆகவே, இது முழுமையாக உற்பத்தித் திறனைத் தருவதற்கு எவ்வளவு காலம் இன்னும் ஆகும் என்பதையும், இவ்வளவு காலதாமதம் ஏற்படுவதற்கு என்ன காரணம் என்பதையும் அமைச்சரிடமிருந்து நான் அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் முடிவுற்று மின்சாரத்தை இப்போது உற்பத்தி செய்துகொண்டிருக்கிறது. இந்தத் திட்டம் 89 முடிய 123.356 மில்லியன் யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்திருக்கிறது.

திரு. மு. இராமநாதன் : பேரவைத் தலைவரவர்களே, இந்தக் காடம்பாறை மின் உற்பத்தி திட்டத்தின் ஆரம்ப கால மதிப்பு எவ்வளவு என்பதையும், காலந் தாழ்வின் காரணமாக ஏற்பட்ட கூடுதல் செலவு எவ்வளவு என்பதையும், பல முறை பணி நின்று போன காரணத்தால் ஏற்பட்ட நட்டம் எவ்வளவு என்பதையும் பொருட்கள் களவு போன காரணத்தால் மின் வாரியத்திற்கு ஏற்பட்ட நட்டம் எவ்வளவு என்பதையும் அமைச் சரவர்கள் அறிவிப்பாரா? அந்த விவரங்களை இந்த அவைக்குத் தெரிவிக்க வாய்ப்பு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு தலைவர் அவர் களே, மாண்புமிகு உறுப்பினர் நாளைக்கு இதுபற்றிப் பேசு வாரா? நான் அப்போது நான் நிறைய விஷயங்களைச் சேகரித்து அவருக்குச் சொல்ல இயலும். இருந்தாலும் ரூ. 163 கோடி திட்ட மதிப்பீட்டில் இந்தத் திட்டம் அமைக்கப்பட்டது என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

LEGISLATIVE ... TRUTH ALONE TRIUMPHS

மின் விநியோகம் முறைப்படுத்துதல்.

*8222 திரு. வி. தம்புசாமி :
மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருவாரூரில் உள்ள மின் நிலைய எல்லைக்குட்பட்ட மின் மாற்றிகள் பழமையானவையாகவும், தேவைக்கு குறை வாகவும் இருப்பதால், மின் விநியோகம் முறைப்படுத்த இயலாமல் மின் விளக்குகள் பாதிக்கப்படுவதை சீர் செய்யும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?